KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்

Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.34

ARTICLES

குறிஞ்சி நிலவியல்

Kurinji Landscape

பெ. அடைக்காத்தாள்[1,*], முனைவர் கதி. முருகேசன்[2]

[1] முனைவர் பட்ட ஆய்வாளர் , தமிழ்த்துறை கணேசர் கலை அறிவியல் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது) மேலைச்சிவபுரி- 622403

[2] உதவிப் பேராசிரியர் (ம) நெறியாளர் தமிழ்த்துறை கணேசர் கலை அறிவியல் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது) மேலைச்சிவபுரி- 622403

***Corresponding author:** பெ. அடைக்காத்தாள், priyavasanthi342@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 10 October 2026
Revised: 12 October 2026
Accepted: 15 August 0026

Article ID
KIJTS-2026-0009

Peer review
Double-blind peer review

Keywords
Thinai
Malai
kurinji
Vavai
Muzhainju
Vazhkkai

ABSTRACT

Kurinji refers to the mountainous region and the areas surrounding the hills. This landscape is distinguished from other geographical regions by its cool climatic conditions, rich vegetation, and diverse wildlife. Mountains possess several distinct physical features. Sangam literature employs various terms such as Malai (mountain), Saaral (mountain slope), Ad ukkam (mountain range or elevated terrain), Muzhainju (cave), Kallagam (rocky terrain), and Varai (hill or mountain). Each of these terms conveys a different meaning and describes a particular feature of the mountainous landscape. Literary works explain how the people living in the Kurinji region utilized the mountains according to their lifestyle and needs. They made effective use of naturally available plants, various components of the mountains, and mountain slopes for their livelihood. In addition to utilizing resources obtained directly from nature, they learned to use waterfalls and practise shifting cultivation by clearing forests on the mountain slopes. In particular, the Kurinji landscape, which is traditionally considered the region where early humans first emerged, reflects several intricate aspects of human life, cultural practices, and ecological adaptation. Thus, Kurinji represents a distinctive geographical and cultural landscape in Sangam literature.

How to cite this article: பெ. அடைக்காத்தாள், & முனைவர் கதி. முருகேசன் (2026). குறிஞ்சி நிலவியல். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 439–449.
https://doi.org/10.63300/kijts603112026.34
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வுச் சுருக்கம்

குறிஞ்சி மலையும் மலை சார்ந்த இடமும் ஆகும். குளிர்ச்சியான வாழ்வியல் சூழலும் தாவரப் பெருக்கமும் விலங்கினங்களும் மிகுந்து காணப்படும் இந் நிலம் மற்ற

நிலங்களில் இருந்து மாறுபட்டு விளங்குகிறது. மலை தன்னுள் பல்வேறு உறுப்புகளையும் பெற்றதாகும். சங்க இலக்கியங்களில் மலை, சாரல், அடுக்கம், முழைஞ்சு, கல்லகம், வரை முதலான சொற்கள் பயின்று வருகின்றன. இவை ஒவ்வொன்றும் வேறு வேறு பொருளை உணர்த்தக் கூடியவை. குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்கள் தங்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்றவாறு மலையைப் பயன் கொண்டமையை இலக்கியங்கள் விளக்குகின்றன. மலையில் இயற்கையாகக் காணப்படும் தாவரங்கள் மலையின் கூறுகள் மலைச்சாரல் முதலியவற்றைத் தங்கள் வாழ்வியல் போக்கிற்கு ஏற்றவாறு மக்கள் பயன்படுத்தினர். இயற்கையில் இருந்து கிடைத்த பொருள்களைப் பயன்படுத்தியதோடு அருவியைப் பயன் கொண்டு மலைச்சாரல்களில் காடழிப்பு விவசாயம் செய்வதற்கும் கற்றுக்கொண்டனர் குறிப்பாக ஆதி மனிதன் தோன்றியதாக கருதப்படும் குறிஞ்சி நிலம் வாழ்வியல் பண்பாடு முதலியவற்றில் பல்வேறு நுட்பமான சூழல்களை கொண்டு விளங்குகிறது.

குறிப்புச் சொற்கள்: திணை, மலை, குறிஞ்சி, வரை, முழைஞ்சு, வாழ்க்கை

முன்னுரை

பண்டைத் தமிழர்கள் நிலங்களை குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என ஐந்தாகப் பாகுபாடு செய்தனர். அந்நிலங்கள் ஒவ்வொன்றும் இயல்பாகத் தனக்கெனத் தனித்தனியான நில அமைப்புகளையும் சூழல்களையும் கொண்டு விளங்கின. அந்நிலங்களில் வாழ்ந்த மக்கள் நிலச் சூழலுடன் வாழப் பழகியதுடன் அங்குக் கிடைத்த பொருள்களையும் பயன் கொண்டு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முற்பட்டனர். ஐந்து நிலங்களில் ஒன்றான குறிஞ்சி நிலம் உயரமான மலைகளையும் சிகரங்களையும் கொண்டது அடர்த்தியான தாவரங்கள் நிறைந்து காணப்படுவதாலும் குளுமையான சூழல் நிலவுவதாலும் உயிரினச் சூழல் அடர்த்தியாக அமைந்திருக்கிறது. மக்கள் நிலச் சூழலுக்கு ஏற்றவாறு உணவு உடை வாழிடம் முதலியவற்றைக் கொண்டு குறிஞ்சி நிலத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட முறையைப் பண்டைய இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அவ்வகையில் இவ்வாய்வுக் கட்டுரை குறிஞ்சி நிலவியலை ஆராய்கிறது.

குறிஞ்சி நிலம்

குறிஞ்சி நிலம் மலையும் மலை சார்ந்த இடத்தைக் குறிக்கும். தொல்காப்பியர் சேயோன் மேய மைவரை உலகம் (தொல். பொருள்.சூ.5) என்னும் சூத்திரத்தில் குறிஞ்சிக்கு உரிய கடவுள் சேயோன் என்று குறிப்பிடுகிறார். சிகரங்கள் மலைச்சரிவுகள் மலைத்தொடர்கள் குகைகள் பிளவுகள் முதலியவற்றைக் கொண்டதாகக் குறிஞ்சி நில அமைப்பு காணப்படுகிறது. கார்காலத்தில் மிகுதியான மழைப்பொழிவைப் பெறும் இந்நிலம் கோடைகாலத்தில் மழையின்மையால் வறண்டு காணப்படுகிறது, குறிஞ்சி நிலத்தில் மிகுதியாகக் காணப்பட்ட குறிஞ்சி மலரின் பெயரால் இந்நிலம் குறிஞ்சி என்று வழங்கப்பட்டது. தி. மணிமொழி "முதன் முதலில் காதல் மணத்திற்கு அடையாளமாகக்

குறிஞ்சிப் பூவைச் சூடியதால் களவு ஒழுக்கத்திற்குக் குறிஞ்சித் திணை என்று பெயர் வைத்தனர். இவ்வாறு குறிஞ்சிப் பூவை சூடிக் கொண்டது வரலாற்றில் தொடக்கம் ஆகும்" என்று திணைக்குப் பெயர் அமைந்த காரணத்தைக் குறிப்பிடுகிறார். (தி. மணிமொழி,குறிஞ்சித் திணையில் கருப்பொருள் வெளிப்பாடு(கட்) அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ், ஜூலை, 2019, ப.28)

பொழுதுகள்

குறிஞ்சி மலைப்பகுதியாக விளங்குவதாலும் குளிர்ச்சியான காலநிலை கொண்ட காரணத்தாலும் களவுக்கு உகந்ததாக விளங்கியது. குறிஞ்சிக்கு உரிய பெரும் பொழுதுகளாக தொல்காப்பியர் கூதிர் முன்பனி ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார். சிறுபொழுது யாமம் இதனை, "குறிஞ்சி கூதிர் யாமம் என்மனார் புலவர்" (தொல்.பொருள். அகத். சூ.7) "பனியெதிர் பருவமும் உரித்தென மொழிப" (தொல். பொருள். அகத். சூ. 8) என்னும் சூத்திரங்களின் வழி அறியலாம். தலைவனும் தலைவியும் பிறர் அறியாமல் காதல் கொள்ளும் சூழலுக்குக் கூதிர் காலமும் யாமமும் துணையாக அமைந்திருக்கின்றன.

நிலமும் கருப்பொருள்களும்

'குறிஞ்சி நிலம் மலைப்பகுதியாக இருப்பதன் காரணமாகத் தனக்கெனப் பொதுவும் சிறப்புமான பல பண்புகளைக் கொண்டதாகத் திகழ்ந்தது. தொல்காப்பியர் கருப்பொருள்களை எட்டாக வகைப்படுத்தி அந்த நிலத்தில் உள்ள பிற பொருள்களையும் கரு பொருள்களாகக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுவர். அவ்வகையில் தெய்வம் உணவு விலங்கு மரம் பறவை பறை தொழில் என்பன கருப்பொருளாக அமைகின்றன. குறிஞ்சித் திணைக்கு உரிய நிலமாக மலை விளங்குகிறது. மலை தன்னகத்தே பல்வேறு சூழல்களையும் அமைப்புகளையும் கொண்டது. மு. சண்முகம் பிள்ளை "குறிஞ்சி நில மக்கள் கானவர் குறவர் குன்றவர் என்று அழைக்கப்படுவர் இவர்கள் மலைப்பகுதிகளில் வாழ்ந்த வீரப் பெருமக்கள் ஆவர். மலை வாழ்க்கைக்கு ஏற்ற திண்மையான வலிமையும் உடலும் வாய்ந்தவர்கள் இவர்கள் மறம் பூண் வாழ்க்கையர் என்றும் வாட் குடிகள் என்றும் குறிக்கப்படுகின்றனர் சிலம்படைந்து இருந்த பாக்கம் குறவர் பாக்கம் சிறுகுடி என இவர்கள் வாழ்ந்த ஊர்கள் வழங்கப்பட்டன. இவர்களுடைய வீடுகள் சிறிய குடிசைகளாக இருந்தன. கால்களை நட்டு அவற்றின் மேல் புற்களால் வேய்ந்திருந்தனர் இவர்களுடைய குடிசைகளின் முன்பு உள்ள முற்றங்களில் வேங்கை முதலிய காட்டு மரங்கள் வளர்ந்து காட்சி தந்தன. இவர்கள் குடிசைகள் நிறைந்திருக்கும் பகுதியைச் சிறுகுடி என்றும் பாக்கம் என்றும் வழங்கினார்கள்" (மு. சண்முகம் பிள்ளை, சங்கத்தமிழர் வாழ்வியல், ப.43) என்று குறிப்பிடுவர்

தெய்வம்

குறிஞ்சி நிலத்துக்கு உரிய தெய்வமான சேயோன் வழிபாடு குறிஞ்சி நிலத்தில் சிறப்பாக நடைபெற்றமைக்குச் சங்க இலக்கியம் சான்று பகர்கிறது. "குறிஞ்சி நிலக் கடவுளாகிய சேயோனுக்கு வேலன் என்னும் பெயரும் உண்டு. வேலைக் கையில் ஏந்தி காட்சியளிப்பதாகக் கருதுவதால் அவனை நெடுவேல் எனவும் சுட்டுவர். தலைவியின் காதல் நோயை உணராத தாயார் குறி சொல்வானாகிய வேலனை அழைத்துக் குறி கேட்பார். அவன் தன் வழிபடு தெய்வமாகிய வேலை ஆயுதமாக உடைய வேலனையும் பிற தெய்வங்களையும் அழைத்துப் பாடித் தெய்வம் ஏறப்பெற்றுத் தலைவியின் நோய்க்கு உரிய காரணமாக அந்நிலத் தெய்வமாகிய முருகனே அமைவதாகக் கூறுவான். பின்னர் வேலனைக் கொண்டு வெறி அயர் களம் அமைத்து வெறி ஆட்டு அயர்வித்து வெறி விளக்குவர். இவ்வெறியாட்டினை முருகவணக்கத்தின் தோற்றத்திற்கு அடிப்படை என்றும் ஓர் இனக் குழு வழிபாட்டு முறை எனவும் மானுடவியலாளர் சுட்டுவர்" (க . காந்தி, பழந்தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், பக். 218, 219) என்று சங்க காலத்தில் வழக்கில் இருந்த முருக வழிபாட்டையும் முருக வழிபாட்டின் அமைப்பு முறையினையும் காந்தி சுட்டுகிறார். முருகனை முருகு என்று சுட்டும் வழக்கம் இருந்ததையும் அறிய முடிகிறது. “முருகன் உறையும் இடங்களாக ஊர்கள், விழாக்கள் நடைபெறும் இடங்கள், சான்றோர்கள் முருகனை வழிபடும் இடங்கள், வெறியாடும் இடம், காடு, சோலை, ஆற்றின் இடைக் குறை, ஆறு, குளம் மற்றும் பல்வேறு இடங்கள், சதுக்கம், சந்தி, கடம்பமரம், மன்றம், பொதியில், கந்துடைநிலை, முதலிய இடங்களில் முருக வழிபாடு நடைபெற்றதைத் திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகிறது”(திருமுருகு. 220-226) இதனால் முருக வழிபாடு பண்டைக் காலத்தில் மிகச் செல்வாக்காக விளங்கியது என்பது தெளிவாகும். முருகனின் தோற்றப் பொலிவு நிறம் ஆகியவற்றைத் திருமுருகாற்றுப்படை எடுத்து கூறும் முறை கருதத்தக்கது. கிழக்குக் கடலில் தோன்றிய இளஞ்சூரியனின் செம்மை நிறத்தைக் கொண்டவன் முருகப்பெருமான் என்று குறிப்பிடுவது முருகனின் நிறத்தைக் காட்டுவதாக அமைகிறது (1-11) முருகனுக்கு உரிய ஆடை அடையாளங்கள் அனைத்தும் செம்மை நிறமாக இருப்பதன் காரணமாகச் சேயோன் என்று அழைக்கப்பட்டதை அறிந்து

கொள்ள முடிகிறது(பரி. 19)

உணவு

குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் உணவுக்காக நிலத்தில் கிடைக்கும் பொருட்களைப் பயன் கொண்டனர். அவர்கள் தாவர உணவுகளையும் மாமிச உணவையும் விரும்பி உண்டனர். தேன் தினை மாவு வேட்டையாடிய பொருள்கள் திணை முதலியன அவர்கள் வாழ்க்கையில் பெரும் பங்கு வகித்தன. குறிஞ்சி நில உணவு முறை குறித்து மலைபடுகடாம் கூறுவது கருதத்தக்கது. இதனை,

அருவி தந்த பழம் சிதை வெண் காழ்

வருவிசை தவிர்த்த கடமான் கொழும் குறை

முளவுமா தொலைச்சிய பைம் நிண பிளவை

பிணவு நாய் முடுக்கிய தடியொடு விரைஇ

வெண் புடை கொண்ட துய் தலை பழனின்

இன் புளி கலந்து மா மோர் ஆக

கழை வளர் நெல்லின் அரி உலை ஊழ்த்து

வழை அமை சாரல் கமழ துழைஇ

நறு மலர் அணிந்த நாறு இரு முச்சி (மலைபடு. 174-183)

என்னும் அடிகள் விளக்கும். குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் வேட்டையாடிக் கொண்டு வந்த உடும்பின் இறைச்சி மானின் கொழுப்பு பன்றியின் தசை தேனால் செய்யப்பட்ட கள் நெல்லால் சமைக்கப்பட்ட கள் பலாவின் விதையில் செய்யப்பட்ட மாவு புளியம்பழம் முதலியவற்றை உண்டமையை அறிய முடிகிறது. "தேனையும் கிழங்கையும் பிற நிலத்தாருக்கு விற்று மீன் நெய்யையும் நறவையும் வாங்கிச் சென்று அதனை உணவாகக் குறிஞ்சி நில மக்கள் பயன்படுத்தினர். முதன்முதலாக மக்கள் தோன்றிய இடம் மலை உச்சியே என்பர். ஆகவே அங்கு மக்கள் விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்து நாளடைவில் விலங்கு வாழ்வில் இருந்து வேறுபட்ட நாகரிக வாழ்வைத் தொடங்கிய இடமும் குறிஞ்சி நிலப்பகுதி எனலாம். மூங்கில்கள் உரசுவதால் நெருப்பு உண்டாவதை கண்டே நெருப்பு உண்டாக்கிக் கொள்வதற்கு தீக்கடை கோலைக் கண்டுபிடித்துக் கொண்டதும் இங்கேதான். விலங்குகளை வேட்டையாடி அவைகளைக் கொன்று உணவாக்கி உண்ண ஆரம்பித்ததில் இருந்து உணவுப் பொருள்கள் பற்றிய இவர்களது அறிவு விரிவுபட ஆரம்பித்தது" என்று சே..நமச்சிவாயம் கூறும் கருத்தும் கருதத்தக்கது.(சே. நமச்சிவாயம், தமிழர் உணவு, ப.10) இதனால் தமிழக நிலப் பகுதிகள் ஒவ்வொன்றிலும் அந்தந்த பகுதியில் கிடைத்த பொருள்கள் உணவுப் பொருள்களாக அமைந்திருந்தமை விளங்கும்.

பூ

குறிஞ்சி நிலத்துக்கு உரிய பூவாகக் கருதப்படுவது குறிஞ்சிப்பூ. நிலத்தில் மிகுதியாகப் பூப்பதால் குறியீடாகக் குறிஞ்சி நில ஒழுக்கத்தைக் குறிப்பாக உணர்த்துகிறது. பி.எல் சாமி குறிஞ்சிப் பூவின் சிறப்பு மற்றும் வாழிடம் ஆகியவற்றை பின்வருமாறு குறிப்பிடுகிறார். "கடல் மட்டத்திற்கு மேல் ஆறாயிரம் அடிக்கு மேற் பட்டுள்ள இடத்தில் இயற்கையில் காணக்கூடிய செடி குறிஞ்சிச் செடியாகும். பிற செடிகளுக்கு அத்தகைய வரையறை இச்செடிக்கிருப்பதுபோல் கிடையாது. ஆறாயிரம் அடிக்கு மேற்பட்ட நிலம், மலையும் மலை சார்ந்த பகுதியுமாகத்தான் இருக்கும். இத்தன்மையின் அடிப்படைக் காரணத்தாலேயே, மலையையும் மலை சார்ந்த இடத்தையும் இச்செடியின் பெயரால் அழைத்தனர். இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. அது இச்செடியின் பூவின்

தனித்தன்மையாகும். இச் செடியின் பூ ஒன்பது ஆண்டுகளுக்கொருமுறை தோன்றிப் பன்னிரண்டு ஆண்டுகள் வரை தொடர்ந்து காணப்படுகின்றது. இயற்கையில் இத்தகைய வியப்பிற்குரிய பூ வேறின்மையால் மலையிலும் மலை சார்ந்த இடத்திலும் காணப்படும் இந்தப் பூவின் பெயராலேயே இந்த இடத்தை அழைத்தனர். செடி நூலில் இச்செடி "ஸ்ட்ரொபிளான்த்தெஸ் (strobilanthes) என்ற இனத்தைச் சார்ந்தது. தமிழ் நாட்டிலும், ஈழத்திலும் மத்திய இந்தியாவிலும் காணப்படுகின்றது. நீலகிரி மலையிலும் பழனி மலையிலும் கோடைக்கானல் மலையிலும் பல ஆண்டுகளாக இச்செடி பூக்கும் காலத்தைக் கண்டு வைத்திருக்கின்றனர். இவை மலைச்சாரல்களில் பூக்குங்கால் பல்லாயிரக்கணக்கான பூக்கள் ஒரே கூட்டமாகத் தென்படும். ஒன்பதாவது ஆண்டிலிருந்து பன்னிரண்டாவது ஆண்டு வரை மலைச்சாரல்களில் கூட்டமாகப் பூத்துக் கிடக்கும்" (பி.எல். சாமி, சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம், ப. 26) சங்க இலக்கியங்களில் குறிஞ்சிப்பூ குறித்த செய்திகள் விரிவான அளவில் பயின்று வருகின்றன. குறிஞ்சிச் செடிகள் கருநீலத் தண்டினை உடையவை என்றும் பூக்கள் நீல நிறமானவை என்றும் தேன் இனிமை உடையது என்றும் அறிய முடிகிறது. இதனை,"கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு/பெருந்தே னிழைக்கும் நாடனொடு நட்பே" (குறுந்.3) என்னும் அடிகள் விளக்கும்

மரம்

குறிஞ்சிக்கு உரிய மரங்களாகத் தேக்கு அகில் சந்தனம் முதலியவை அறியப்படுகின்றன. குறிஞ்சிக்கு உரிய மரமான அகில் மணமுடைய மரமாகக் கருதப்படுகிறது. வழிபாட்டிற்கும் வாழ்வியல் பயன்பாட்டுக்கும் உரியதாக அகில் விளங்கியது. ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுக்கும்போது அகில் கட்டைகளை வெள்ளம் அடித்து வந்ததாக இலக்கியப் பாடல்கள் சான்று பகர்கின்றன. இதனைப் பொருநராற்றுப்படை (236 - 238) விளக்கும். பெண்கள் நீரில் புனல் விளையாட்டின்போது அகில் கட்டையைத் தெப்பமாகப் பயன்படுத்தியதற்குச் சிறுபாணாற்றுப்படை சான்று பகர்கிறது (116,117) பெண்கள் தங்களின் கூந்தல் ஈரத்தைப் போக்கிக்கொள்ள அகில் புகை ஊட்டியதைச் சிறுபாணாற்றுப்படை (263) விளக்குகிறது. அகில் கண்ட சருக்கரை ஆகியவற்றைச் சந்தன விறகில் நெருப்பு மூட்டி அதில் இட்டுத் தம் கூந்தலைப் பெண்கள் உலர்த்தியதைக் குறுந்தொகை (286) குறிப்பிடுகிறது. முருகனை வழிபடுபவர்கள் சந்தனம் அகில் ஆகியவற்றைப் புகைத்து வழிபட்ட முறையைப் பரிபாடல் கூறுகிறது(18) சந்தனம் ஆரம் என்னும் பெயரால் அழைக்கப்பட்டது. வைகை ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தபோது அகில் வாழை சந்தனம் ஆகிய மரங்கள் அசையுமாறு விரைந்து சென்றதைப் பரிபாடல் குறிப்பிடுகிறது (12) மலையிலிருந்து விழும் அருவி சந்தன மரத்தை நனைத்து விழுந்ததாக அகநானூறு குறிப்பிடுகிறது (228) மலைப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் மனம் மிகுந்த சந்தன மரங்களை வெட்டி அந்த இடத்தை உழவு செய்து விவசாயம் மேற்கொண்டதை அகநானூறு குறிப்பிடுகிறது (388)

மழை பெய்து ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்தபோது சந்தனம் அகில் முதலான கட்டைகள் அடித்துச் செல்லப்பட்டதைப் பொருநராற்றுப்படை குறிப்பிடுகிறது (234-239)

நீர்

குறிஞ்சிக்கு உரிய நீராக அருவி நீரும் சுனை நீரும் அமைகின்றன. குறிஞ்சி நிலத்தில் மழை பெய்து மலைச்சரிவுகளில் நீர் பெருகி அருவியாகப் பெருக்கெடுக்கிறது. அருவிகள் குறிஞ்சி நிலத்தில் விழும் காட்சி பாடல்களில் பதிவு பெற்றுள்ளது. குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் அருவி நீரை மலை நிலங்களில் பாய்ச்சித் தினை பயிரிட்டனர். மலையிலிருந்து விழும் அருவி கீழே விழும்போது முரசின் ஒலி போன்று ஒலித்ததாகப் புறநானூறு குறிப்பிடுகிறது (149) மலையிலிருந்து வழியும் அருவி துகிலை ஒத்துக் காணப்பட்டது (புறம். 154) மூங்கில் வளர்ந்திருக்கும் மலைப்பகுதிகளில் அருவிகள் ஒலியோடு விழுந்தன (புறம்.168) என்ற வாறாக இலக்கியங்கள் அருவிக் காட்சிகளை இலக்கியங்களில் பதிவு செய்துள்ளன. குறிஞ்சிக்கு உரிய மற்றொரு நீர் ஆதாரமான இயற்கையாக மலையில் அமைந்து காணப்பட்டது. சுனையில் பல்வகைப் பூக்கள் மலர்ந்ததையும் அதனை மக்கள் பயன் கொண்டதையும் இலக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

பறவை

சங்க இலக்கியத்தில் செல்வாக்கு பெற்ற பறவையாக மயில் அறியப்படுகிறது. குறிஞ்சி நிலத்தில் மயில் பற்றிய குறிப்புகள் மிகுதியாகப் பயின்று வந்துள்ளன. ஆயினும் முல்லைத் திணை பாடல்களிலும் மயில் பற்றிய குறிப்புகள் பயின்று வருகின்றன. " மயில் முல்லைத் திணைக்கும் உரிய பறவையாயினும் அடுத்த இடத்தினைப் பெறுவது பாலத்திணை. அகத்திணைப் பாக்களில் பாலைத்திணைப் பாக்கள் மிகுதி என்பது இதற்கொரு காரணம். தவிர, பாலை நிலம் பற்றிய வருணனை விரிவாகப் பாடப்பட்டிருப்பதும், பிரிந்திருக்கும் தலைவி தலைவன் பற்றிய பலதுறைப்பாக்களிலும் மயில் வருணனைக்காக, உவமத்திற்காக உள்ளுறைக்காக எடுத்தாளப்பட்டிருப்பதும் பிற காரணங்கள். முல்லைத் திணையில் கார்ப்பருவ வரவினை அறிவுறுத்தற் பொருட்டே பெரும்பாலும் மயிலின் அகவலும் ஆடலும் இடம் பெறுகின்றன. முல்லையும், குறிஞ்சியும் முறைமையில் திரிந்து உருவாவது பாலை, ஆகலின் இதில் முரண்பாடு ஏதுமில்லை என்பது நினைவு கூரத்தக்கது" (பாக்கியவதி சங்கரலிங்கம், சங்க இலக்கியத்தில் மயில், ப.5) என்னும் சிந்தனையின் வழியாக புலவர்கள் மயிலை இலக்கியப் பயன்பாட்டு நோக்கில் பயன்படுத்தி இருப்பது தெளிவாகிறது. மயில் பற்றிய வர்ணனையும் மயிலின் உறுப்புகள்

பற்றிய வர்ணனையும் சங்க இலக்கியத்தில் பல இடங்களில் பயின்று வந்துள்ளமையை அறிய முடிகிறது. இதனை," ஒலிநெடும் பீலி ஒல்க மெல்லியல்/ கலிமயில் அகவும் வயிர்மருள் இன்னிசை" (நெடுநல்.98.99) 'பைந்தோட்டு மஞ்ஞை" (புறம்.344:1)' "குடுமி நெற்றி நெடுமாத் தோகை/ காமர் கலவம் பரப்பி ' (அகம் 194:11-12)

“அணிகிளர் கலாவம் ஐது விரித்து இயலும்” (நற்.264:3) “தோகைத் தூவித் தொடைத்தார் மழவர்”(அகம். 249:12) 'மடஞ்சால்,மஞ்ஞை அணிமயிர்சூட்டி' (புறம் 260:26) “ஒலிநெடும் பீலி 'ஒண் பொறி மணித்தார்” (புறம் 50:3) 'விடுபொறி மஞ்ஞை (பரி.21:32) என்னும் சான்றுகளால் அறியலாம். உவமை உருவகம் உள்ளுறை இறைச்சி முதலியவற்றிலும் மயிலின் இடம் உள்ளது.

விலங்குகள்

சங்க இலக்கியங்களில் யானை புலி கரடி முதலான விலங்குகள் மற்றும் பாம்புகள் குறித்த குறிப்புகள் மிகுதியாகப் பயின்று வருகின்றன. குறிஞ்சி நிலம் குளிர்ச்சியும் மிகுதியான தாவர வளமும் கொண்டிருக்கும் காரணத்தால் அங்கு உயிரினச் சூழல் பரவலாக மிகுதியாகக் காணப்படுகிறது. இதனால் அங்கு அங்கு தாவரங்களை உண்டு வாழும் விலங்குகளும் விலங்குகளை உண்டு வாழும் விலங்குகளும் மிகுதியாக உண்டு என்பதை அறிய முடிகிறது. அவ்வகையில் தாவர உணவை உண்டு வாழும் யானை குறிஞ்சி நிலத்தில் மிகுதியாகக் காணப்படுகிறது. யானை குறித்த குறிப்புகள் சங்க இலக்கியத்தில் மிகுதியாகக் காணப்படுகின்றன. யானைகள் கரிய நிறமும் பெரிய தோற்றமும் உடையவை யானை காடுகளில் பிளிரும் ஓசையைப் புலவர்கள் பாடல்களில் பதிவு செய்துள்ளனர். “மூங்கில்கள் உரசும் ஓசையோடும் வானில் மேகங்கள் மோதி இடி இடிக்கும் ஓசையோடும் யானையின் பிளிறல் ஒலி ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது”(நற். 62 ; அகம். 398) “கரும்பு பிழியும் இயந்திர ஓசைக்கு யானையின் பிளிறல் உவமையாகக் கூறப்பட்டுள்ளது”(ஐங். 55; பெரும்.259) “காட்டில் உள்ள மரங்களை உரசுவதும் மோதுவதும் யானைகளின் இயல்பான குணம் என்பதை இலக்கியச் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன” (குறுந். 37; நற். 362 ; அகம். 121)

தொழில்

குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் பல்வகைத் தொழில்களையும் மேற்கொண்டனர். அவர்களுடைய வாழ்க்கை காடு மலை சார்ந்த வாழ்க்கையாக அமைந்தது. அதனால் மலைப்பகுதிகளில் காணப்படும் மரங்களை வெட்டி எரித்துக் காடு அழிப்பு விவசாயத்தை மேற்கொண்டனர். அருவி நீரைக் கரடு முரடான நிலத்தில் பாய்ச்சித் தினைப்பயிரை நட்டு அதனைக் காக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். குறிஞ்சி நில மக்களின் ஆற்றல் தொழில் குறித்து மு. சண்முகம் பிள்ளை கூறும் கருத்து குறிப்பிடத்தக்கது "காட்டில் வாழக்கூடிய மக்களாகிய குறவர்கள் காட்டில் வாழும் விலங்குகளோடு போரிட்டு வெற்றி பெறக்கூடிய உடல் உடையவர்களாக வாழ்க்கை நடத்தியவர்கள். வில் பயிற்சி பெற்றதனால் இவர்கள் தோள் வலிமை வாய்ந்திருந்தனர். வேட்டையாடுதல் இவர்களுடைய முக்கியமான தொழிலாகும். வில்லும் அம்பும் இவர்களின் ஆயுதங்கள். வேட்டைக்கு உதவியாக நாயையும் உடன் கொண்டு சென்றனர். நாய்கள் மிருகங்களைக் கொன்று இவர்களுக்கு வேட்டையாட உதவுகின்றன. பகைவர்களுடைய பசுக்களைக் கவர்ந்து வருதலும் உண்டு. இவர்கள் உழு தொழிலும் செய்தவர்கள். அகில் சந்தனம் முதலிய மரங்களை அழித்து நிலத்தைத்

திருத்தித் தினை பயிரிடுவர். தினையோடு அவரை முதலியனவும் பயிரிடுவது உண்டு. தினை அறுவடை செய்த பின்பு அவரைகள் பூத்துப் பயன் தரும். தினைக்கதிர் முற்றும் பருவத்தில் அதனைக் கவர வரும் கிளி முதலிய பறவைகளைக் குறவர் மகளிர் பரண்மேல் இருந்து கவண்கல் எறிந்து காவல் புரிவர். இரவில் யானைகள் வந்து தினைப் புனத்தை அழித்து விடாதபடி குறவர்கள் பரணில் இருந்து காவல் புரிவர்" ((மு. சண்முகம் பிள்ளை, முற்குறித்த நூல், பக்.43 - 44)

மரபுச் சடங்கு

குறிஞ்சி நிலத்தில் நடைபெறும் சடங்குகளில் ஒன்று வெறியாடல். இந்நிகழ்வு குறிஞ்சிக்கே சிறப்பான நிகழ்வாகக் கருதப்படுகிறது. "தலைவனும் தலைவியும் காதல் கொண்டு ஒருவரை ஒருவர் சந்திக்க இயலாத சூழ்நிலை ஏற்படும்போது தலைவி சந்திக்க முடியாத வருத்தத்தால் உடல் மெலிவாள். அத்தகைய சூழலில் செவிலியும் நற்றாயும் அவளுக்கு நேர்ந்த துன்பம் குறித்து ஆராய்வதற்காக வேலைனிடம் சென்று குறை கேட்டு நிற்பார். அவனும் வெறியாடித் தலைவிக்கு நிகழ்ந்ததைக் கூறுவான். குறிஞ்சிப்பாட்டில் தலைவி உடல்நலம் குன்றி இருக்கும் சூழலில் செவிலி பல இடங்களுக்கும் சென்று குறி கேட்டதைச் செவிலியிடம் தோழி கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது"(குறிஞ்சிப். 1- 8) வெறியாட்டு என்பதற்கு, க. காந்தி தரும் விளக்கம் குறிப்பிடத்தக்கது. " வெறியாட்டு என்பது பழந்தமிழரின் தனித்த வழிபாடாகும். வழிபாடு செய்பவர்களின் வாயிலாக இறைவன் வெளிப்படுவான் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தோன்றிய இவ்வழிபாட்டு முறை வெறி எனவும் வெறியர்தல் எனவும் இலக்கியங்களில் குறிப்பிடப்படுகிறது. மருந்தாலும் பிறவற்றாலும் நீங்காத நோய் வெறியாட்டால் நீங்கும் என்று நம்பிக்கை கொண்டு வெறியர்தலே வெறியாட்டு எனப்படும். காதல் வயப்பட்ட பெண்களின் உடல் நலம் குன்றிய வழி அதனை நிறைவு செய்யும் பொருட்டு செய்யப்படும் ஒரு வழிபாட்டுச் சடங்கு முறையாக காட்சி தருகிறது. இவ்வெறியாட்டினை இன்றைய தமிழக நாட்டுப்புறங்களில் வழக்கில் இருக்கும் பேயோட்டுதல் என்பதனோடு இயைந்து நோக்கலாம். வெறியாட்டு வழிபாட்டு முறை மலை வாழ்வோர் ஆகிய குறிஞ்சி நில மக்களுக்கு உரிய வழிபாட்டு முறையாக இலக்கியச் சான்றுகள் அறிவிக்கின்றன" (க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், ப.217) "வெறியாடும் இடம் வெறியயர் களம் என்று குறிப்பிடப்படுகிறது. இரவுக் காலத்தில் வெறியாட்டு நடைபெறும். வெறியாடு களத்தில் புதுமணல் பரப்பி தினை அரிசியை ஆடு வெட்டிய இரத்தத்துடன் கலந்து தரை எங்கும் சிதறி வெறியாட்டு நிகழ்த்தப்படும். இதனைச் சங்கச் சான்றுகள் விரிவாக எடுத்துக் கூறியிருக்கின்றன"(குறுந். 263: 1-3 ; அகம். 22: 6-11)

பண்

மலை நிலத்தில் பாடப்படும் பண் குறிஞ்சிப் பண்ணாகும். பெரும்பாலும் இரவுக் காலத்தில் பாடப்படும். பாடப்படும் காலம் அச்சம் தரும் காலமாகவும் இடமாகவும் அமைவதைத் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன. இதனை, "நறுங்கா நடுக்கத்துக்

குறிஞ்சி பாடி" (மலைபடு. 354) என்னும் மலைபடுகடாம் சான்றால் அறியலாம். அச்சத்தைப் போக்கிக்கொள்ள மலை நிலத்தில் குறிஞ்சிப் பண் பாடும் வழக்கம் நிலவியது. முருகனை வழிபடும் மக்கள் நறுமணமுள்ள புகை புகைத்துக் குறிஞ்சிப் பண்பாடி முருகனை வழிபட்ட பான்மையினைத் திருமுருகாற்றுப்படை விளக்குகிறது. (239,240) மலைச்சாரல்களில் விறலியர் தம் விரல் கொண்டு யாழ் மீட்டிக் குறிஞ்சிப் பண் பாடியதைப் பெரும்பாணாற்றுப்படை எடுத்துக்காட்டுகிறது (175-182) கொடிச்சி தன் கூந்தலைக் கோதிக் கொண்டு மலைச் சாரலில் பாடிய குறிஞ்சிப் பண் கேட்டு யானைகள் தினைக் கதிரைத் தின்னாமல் நின்றதை அக நானூறு விளக்குகிறது (102:5-9) ஊரைக் காவல் காக்கும் காவல் காவலர்கள் கேட்பவர்கள் அச்சம் கொள்ளத்தக்க வகையில் குறிஞ்சிப் பண் பாடிக் காவல் காத்த முறையினை நற்றிணையால் அறிய முடிகிறது (255:1-3)

அக வாழ்வு முறைமை

குறிஞ்சித் திணையில் காந்தருவக் காதல் சிறக்கிறது, தலைவன் தலைவி இருவரும் ஒருவர் எதிர்பட்டு நல்ல விதியின் காரணமாகக் காதல் கொள்வது காந்தருவம் எனப்படும். குறிஞ்சி நிலம் மலை நிலம் என்பதாலும் இதற்குரிய சிறுபொழுது யாமம் என்பதாலும் தலைவனும் தலைவியும் களவில் சந்தித்துத் தங்களது காதலை வளர்த்துக் கொள்கின்றனர். தலைவி தலைவனைச் சந்திப்பதற்கான சூழல் என்பது தினைப்புனக் காவலில் மட்டுமே நிகழ்வதாகும் அவள் தலைவனை சந்திக்கும் காலம் தினையின் அறுவடைக் காலம் வரை மட்டுமேயாகும்.தலைவனைச் சந்திக்க இயலாத சூழலில் தலைவி எவ்வாறேனும் தலைவனைச் சந்திக்க வேண்டும் என்னும் எண்ணம் கொள்கிறாள் அவ்வாறு நடக்காதபோது அவன் சார்ந்த ஏதேனும் ஒன்றைக் கண்டு மகிழ்ச்சி கொள்பவளாக இருக்கிறாள். குறிஞ்சி நிலத்தில் நிகழும் காதல் ஒழுக்கத்திற்கு இயற்கை பெருமளவில் பங்களிப்பைச் செய்கின்றது. இதனை, "நாள் மழை தலைஇய நன்னெடுங் குன்றத்து/ மால்கடல் திரையின் இழிதரும் அருவி/ அகலிருங் கானத்து அல்கணி நோக்கி/ தாங்கவும் தகைவரை நில்லா நீர்சுழல்பு" (நற். 17:1-4) என்னும் சான்றால் அறியலாம். தலைவனைக் காண இயலாமல் தவிக்கும் தலைவி அவனது மலையைக் கண்டு ஆறுதல் அடைவதை மேற்கண்ட பாடல் விளக்குகிறது. அவ்வாறே, "அவனது மலைநாட்டில் இருந்து வரும் தென்றல் காற்று உடலைத் தீண்டுவதன் காரணமாக அவன் இல்லாத் துன்பம் நீங்கி சிறிது ஆறுதல் அடைகிறாள்"(நற். 236) "ஒவ்வொரு நாளும் தலைவியைக் காண்பதற்காகத் தலைவன் கடுமையான வழிகளைக் கடந்து காண வருவதால் அவனுக்கு ஏதேனும் துன்பம் ஏற்படுமோ என்று மிகுந்த வருத்தம் கொள்கிறாள். அதன் காரணமாக அவள் மனத்தில் ஏற்படும் அச்சம் குறிஞ்சி திணைப் பாடல்கள் பலவற்றிலும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது" (குறிஞ்சிப். 251-261 ; நற். 353 : 9-11)

முடிவுரை

குறிஞ்சி நிலம் உயரமான மலைகளையும் சிகரங்களையும் பல்வேறு இயற்கைக் கூறுகளையும் கொண்டதாகும். அடர்த்தியான தாவரச் சூழல் உயிரியல் சூழல் ஆகியவற்றால் சிறக்கிறது. குளிர்காலத்தில் அதிகமான மழையும் குளிரும் நிலவுவதால் காதல் வாழ்க்கைக்கு ஏற்றதாகவும், மிகுதியான உணவு கிடைக்கும் காரணத்தால் விலங்குகளின் வாழ்வுக்கும் ஏற்றதாக அமைகிறது. உயரமான நிலப்பகுதிகள் இயல்பாகவே குளிர்ச்சி உடையதாக இருப்பதால் உயர் நிலத்தில் வாழும் விலங்குகளுக்கும் மக்களுக்கும் ஆண்டு முழுவதும் உணவு கிடைக்கும் நிலமாகக் குறிஞ்சி நிலம் விளங்குகிறது. சங்க இலக்கியங்கள் குறிஞ்சி திணையின் நுட்பங்களைப் பாடல்களில் ஆழமான நோக்கில் பதிவு செய்துள்ளன.

துணை நூல்கள்

References

[1.] அகநானூறு மூலமும் உரையும், சென்னை, என்.சி. பி. எச், 2004

[2.] கதிர்முருகு, பத்துப்பாட்டு மூலம் உரையும், சென்னை, சாரதா பதிப்பகம், 2009

[3.] காந்தி க, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் , சென்னை : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் , 1980

[4.] குறுந்தொகை மூலமும் உரையும், சென்னை, என்.சி. பி. எச், 2004

[5.] சண்முகம்பிள்ளை மு, சங்கத் தமிழர் வாழ்வியல், சென்னை: உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், 2004

[6.] சாமி பி. எல், சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம், சென்னை : சேகர்பதிப்பகம், 1970

[7.] தொல்காப்பியம், பொருளதிகாரம், சென்னை : சாரதா பதிப்பகம், 2007

[8.] நற்றிணை , மூலமும் உரையும் , சென்னை, என்.சி. பி. எச், 2004

[9.] பரிபாடல் மூலமும் உரையும், சென்னை, என்.சி. பி. எச், 2004

[10.] பாக்கியவதி சங்கரலிங்கம், சங்க இலக்கியத்தில் மயில், சென்னை : உலகத் தமிழ் கல்வி இயக்கம், 1989

[11.] மணிமொழி , தி, குறிஞ்சித் திணையில் கருப்பொருள் வெளிப்பாடு (கட்) அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ், ஜூலை, 2019,